**பாடசாலை சமூகசேவை வசதிகள் (தமிழில்)**

பாடசாலை சமூகசேவை என்பது சமூக விடயங்கள் குறித்த கேள்விகள், பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளின்போது அணுகக்கூடிய ஒரு நிலையமாகும். இந்த வசதிகளை பிள்ளைகள்/இளையோர், பெற்றோர், பராமரிப்பு- மற்றும் கற்பிக்கும் நபர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் இது இலவசமானதாகும்.

எமது வசதிகள் பின்வரும் சேவைகளைக் கொண்டுள்ளது:

- சமூக விடயங்கள் குறித்த கேள்விகள், பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளின்போது தகவல்கள், ஆலோசனை மற்றும் உதவிகள்
- வளர்ப்பு- மற்றும் பிள்ளைகள் பராமரிப்புக் குறித்த கேள்விகளின்போது தகவல்கள், ஆலோசனை மற்றும் உதவிகள்
- வேறு துறைசார் நிலையங்கள் குறித்து அறியத்தருவது
- சமூக விடயங்களின்போது வகுப்புகளுடன்- மற்றும் பாடசாலைத் திட்டங்களுடன் சேர்ந்து செயற்படுவது

முன்னராகவே தொடர்புகொள்ளுவது, உங்களுக்கு நன்கு உதவுவதற்கு எமக்கு வாய்ப்பளிக்கும்.